**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 14/2017**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் தேதி வியாழன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 11**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Dr. வடிவேல் | தொழில் | :மருத்துவர் |
| தந்தை பெயர் | : தட்சணாமூர்த்தி | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 37 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. அசோக்குமார் Gr.1 - 2511 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்பொழுது சிதம்பரம் அரசு காமராஜ் மருத்துவமனையில் 2ம் ஆண்டு குழந்தை நல முதுகலை பயிற்சி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.05.2016 ம் தேதியன்று விழுப்புரம் அரசு பொது மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் மருத்துவராக பணியில் இருந்தபோது முற்பகல் 11.50 மணிக்கு செஞ்சி உதவி ஆய்வாளரிடமிருந்து ஏழுமலை வயது 52 த/பெ கண்ணன் என்பவரது பிரேதத்தினை பிரேத கூராய்வு செய்து சான்று வழங்குமாறு தலைமைக்காவலர் எண்.1593 திரு. ஜாகீர் உசேன் அவர்களின் மூலமாக விண்ணப்பம் பெறப்பட்டது. உடல் கூராய்வு பிற்பகல் 1.00 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பித்தேன். அப்போது உடலின்மீது காணப்பட்ட அங்க அடையாளங்கள் முறையே

1. வலது பக்க நெஞ்சு பகுதியில் ஒரு கருப்பு மச்சம்.
2. வலது முட்டியின் மேல் ஒரு காய வடு

**வெளிப்புற ஆய்வு:**

1. மிதமான போஷாக்கு உடைய ஆண் சடலமாக காணப்பட்டது.
2. பிண விரைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது.
3. கண்கள் மற்றும் வாய் மூடிய நிலையிலும் நாக்கு உள்ளடங்கியும் காணப்பட்டது-

**வெளிப்புற காயங்கள்:**

1. Craniotomy wound என்று சொல்லப்படும் அறுவை சிகிச்சையினால் ஏற்பட்ட காயமானது இடது பக்க தலைப்பகுதியில் காணப்பட்டது. அதன் அளவு 28 செ.மீ.

2. ஆறுகின்ற நிலையில் தையல் போடப்பட்ட காயம் வலது பக்க தலையில் காணப்பட்டது அதன் அளவு 4 செ.மீ.

3. ஆறுகின்ற நிலையில் சிராய்ப்பு காயம் கீழ்கண்ட இடங்களில் காணப்பட்டது.

1. 3x1 வலது பக்க நெற்றியில் காணப்பட்டது.

2. 6x2 இடது முழங்கையில் வெளிப்பகுதியில் காணப்பட்டது.

3. 5x1 வலது தோள்பட்டையில் காணப்பட்டது

4. 11x7 வலது கை முட்டியின் வெளிப்பகுதியில் காணப்பட்டது.

Tracheostomy wound என்று சொல்லப்படும் அறுவை சிகிச்சையினால் ஏற்படுத்தக்கூடிய காயமானது கழுத்தின் முன் பகுதியில் 2x1x2 c.m அளவில் காணப்பட்டது.

தலைப்பகுதி கூராய்வு செய்து பார்த்ததில் தலையில் போர்த்திய தோல் உள்பகுதி இடது பக்க தலை மற்றும் வலது பக்க தலை மற்றும் வலது பக்க தலையின் பிற்பகுதி கன்னிய நிலையில் காணப்பட்டது. கபால எலும்பில் அறுவை சிகிச்சையினால் ஏற்படுத்தக்கூடிய burrhole என்று சொல்லப்படும் துளை இடது பக்க தலையில் 6 இடங்களில் காணப்பட்டது. அதனடியே உள்ள மூலையை போர்த்திய தோல் வெட்டிய நிலையில் காணப்பட்டது. இடது பக்க மூலை முழுவதும் ரத்தம் கசிந்த நிலையில் காணப்பட்டது. குறுக்கு வெட்டு தோற்றத்தில் ரத்தம் உறைந்து காணப்பட்டது. தலையின் அடிப்பகுதி எலும்பு தன்மையாக காணப்பட்டது. இதனுடைய நெஞ்சு பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் நெஞ்சு எலும்புகள் தன்மையாக இருந்தது. இருதயம் சாதாரண அளவிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் உள் அறையில் சிறு கிராம் அளவில் ரத்தம் உறைந்து காணப்பட்டது. பெரிய தமணிகள், ரத்த நாளங்கள், வால்வுகள் தன்மையாக இருந்தது. 2 நுரையீரல்களும் நெஞ்சு கூட்டின் உட்பகுதியில் ஒட்டிய நிலையில் காணப்பட்டது. குறுக்கு வெட்டு தோற்றத்தின் ரத்தம் உறைந்த நிலையில் காணப்பட்டது.

வயிற்று பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் இரைப்பையில் சுமார் 100 மி. அளவில் பச்சை நிறத்தில் திரவம் காணப்பட்டது. உள்தோல் தன்மையாக இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் 2 சிறுநீரகங்களும் சாதாரண அளவிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் ரத்தம் உறைந்து காணப்பட்டது. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. இவருடைய இடுப்பு எலும்பு, நாவடி எலும்பு மற்றும் முதுகுத்தண்டு எலும்பு தன்மையாக இருந்தது.

பிணக்கூராய்வு பிற்பகல் 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. உடம்பில் காணப்பட்ட காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன் ஏற்பட்டவை. மேலும் இறந்தவர் தன்னுடைய தலையில் ஏற்பட்ட காயங்களின் விளைவால் இறந்திருக்க கூடும் என்று

கருத்துதெரிவித்துள்ளேன். போலிசார் விசாரித்தார்கள்.

**7. 10.05.2017 தேதியிட்ட பிணக்கூராய்வு சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

## குறுக்குவிசாரணை:

**4.** போதிய வாய்ப்பளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் சாட்சியின் சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

## மறுவிசாரணை:

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.